சார்பு நீதிமன்றம், பண்ருட்டி. நாள்: 09.01.2025

O.S.No.111/2016

வா.சா.1 - ராஜேந்திரன்

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய ம.சா.1-ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் செல்வி.K.மும்தாஜ்,பி.ஏ.,எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. எனக்கு 2002-ம் வருடம் திருமணம் நடைபெற்றது. திருமண பத்திரிக்கைய இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.15 மற்றும் 16 ஆவணங்களின் படி நான் State Bank of India, பண்ருட்டி வங்கி கணக்கிற்கு நான் அனுப்பிய வரைவோலைக்குரிய தொகை Credit செய்யப்பட்டதாக என்னுடைய வெளிநாட்டு முகவரிக்கு SBI, பண்ருட்டி வங்கியிலிருந்து தபால் அனுபட்டுள்ளது என்றால் சரிதான்.

2. நான் வெளிநாட்டிற்கு செல்வதற்கு முன்பு NRI வங்க கணக்கு தொடங்கினேன். நான் வெளிநாட்டிலிருந்து வந்த பிறகு மேற்படி NRI வங்கிகணக்கை முடித்து விட்டேன். என்னுடைய மனைவிக்கு புதுச்சேரி மாநிலம், முத்திரையர் பாளையம். என்று சொன்னால் சரிதான். நான் திருமணமானதிலிருந்து முத்திரையர்பாளையத்தில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் அய்யங்கொட்டிப்பாளையத்தில் உள்ள Housing Board ல் வாடகைக்கு குடியிருக்கிறேன்.திருமணமாகி 22 வருடங்களில் என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால் ஒரு பிளாட் உள்ளது.

3. நான் வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை வைத்து எனது மாமியார் வீட்டிற்கு அருகில் வீடு மற்றும் நிலம் ஆகியவை வாங்கி அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய வீடு, மனை ஆகியவற்றை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் வெளிநாட்டில் இருக்கும்போது 1 ம் பிரதிவாதியை தவிர வேறு யாருக்கும் பணம் அனுப்பியதில்லை. 4 ம் பிரதிவாதியின் படிப்பு செலவுகளை நான் செய்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான் வீடுகட்டுவதற்கு சிமண்ட், கட்டுமான பொருட்கள் ஆகியவை வாங்கி கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய திருமண செலவினை நானே சொந்த செலவில் பார்த்துக்கொண்டேன். என்னுடைய திருமண செலவினை 1 ம் பிரதிவாதி தான் கடன் வாங்கி செலவு செய்தார் என்றும் அந்த கடனை 1 ம் பிரதிவாதி தான் அடைத்தார் என்றால் சரியல்ல. என்னுடைய அம்மா எந்த வருடம் இறந்தார் என்பது நினைவில்லை. சுமார் 10 வருடத்திற்கு மேல் இருக்கும். திருமணத்திற்கு பின்பு நான் என்னுடைய

மாமியார் வீட்டுடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தேன் என்றும் என்னுடைய அம்மாவை 1ம் பிரதிவாதி தான் பராமரித்து வந்தார் என்றும் அவருடைய இறப்பிற்கு பின்பு ஈம சடங்கு மற்றும் செலவுகளை 1ம் பிரதிவாதி தான் செய்தார் என்றால் சரியல்ல.

5. எனக்கு பாண்டிச்சேரியில் தான் குடும்ப அட்டை உள்ளது. எனக்கு திருமணம் ஆன பின்பு 2002 ஆண்டிலேயே பூர்வீக சொத்துக்களில் பாகம் கேட்கவில்லை என்றால் பாகம் கேட்டேன் ஆனால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் 2003ம் ஆண்டே பங்காளிகளை வைத்து பாகம் கேட்டேன். கலியமூர்த்தி, குப்புசாமி. குணசேகரன். திருநாவுகரசு. பாண்டுரங்கன் ஆகிய பங்காளிகளை வைத்துக்கொண்டு பாகம் கேட்டேன். 2002 ஆம் ஆண்டு பாகம் கேட்ட பின்பு குறிப்பிட்ட காலகெடுவிற்குள் வழக்கு தாக்கல் செய்யதாததால் சட்டப்படி இந்த வழக்கு செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. அவர்கள் தான் மகளின் திருமணத்திற்கு பிறகு பாகம் தருவதாக காலம் தாழ்த்தி வந்தார்கள் .

6. நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு பாகம் கேட்டிருந்தால் பாகம் கோரி வழக்கு முன் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 1978 முதல் 1984 வரை டிராக்டர் டிரைவராக பணி செய்து வந்தார் என்றால் சரிதான். ஆனால் எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை பணிசெய்தார் என்பது தெரியாது. நெல்லிக்குப்பம் ராஜமணி என்பவரிடம் 1ம் பிரதிவாதி 1984 லிருந்து 10 வருடம் லாரி டிரைவராக வேலை செய்து வந்தார் என்றால் லாரி டிரைவராக வேலை செய்தார் ஆனால் குறைவான வருடம் தான் வேலை செய்தார். பின்னர் 9 வருடம் வெங்கடாசலபதி ரைஸ்மில்லில் லாரி டிரைவராக வேலை செய்து வந்தார் என்றால் குறைவான காலங்கள் தான் வேலை செய்தார்.( வாதி தரப்பில் மேற்படி கேள்விகளை பொருத்து எதிர்வழக்குரையில் எவ்வித சங்கதிகளும் சொல்லப்படாதநிலையில் அது குறித்து கேள்வி எழுப்ப முடியாது என ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது)

7. 5 முதல் 11 அயிட்ட சொத்துக்கள் என்னுடைய வருமானத்தை கொண்டு வாங்கப்பட்டது என்பதற்கான எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொருத்து பிரதிவாதிகள் பாகம் கொடுக்க தயாராக இருக்கிறார்கள் என்றால் இதுவரை யாரிடமும் சொல்லவில்லை. 5 முதல் 11 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்து என்றும் அதில் நானோ என்னுடைய சகோதரியோ பாகம் கோர அருகதை இல்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களை பொருத்து எங்களுக்கு பாகம் கிடைக்ககூடியதென்றும் 5 முதல் 11 அயிட்ட சொத்துக்களை பொருத்து வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டுமென்றால் சரியல்ல.

8. நானும் என்னுடைய சகோதரியும் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு 1ம் பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. 5 முதல் 11 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது. 5 முதல் 11 அயிட்ட சொத்துக்களை கிரையம் வாங்கிய ஆவணங்களில் நானோ எனது உறவினர்களோ சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் அவருடைய உறவினர்கள் தான் சாட்சி கையொப்பம்

செய்திருக்கிறார்கள். 5 முதல் 11 அயிட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் சுய சம்பாதிய சொத்துக்கள் என்பதால் தான் என்னுடைய உறவினர்களோ, நானோ, சாட்சி கைெ யாப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.